முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆனி மாதம் 12 திகதி முதல்
சுபகிருது வருடம் ஆனி மாதம் 19 திகதி வரை
(26.06.2022 ஞாயிறு முதல் 03.07.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வரலாற்றுச் சிறப்புமிக்க பாரதமே
   வந்தாரை வாழவைக்கும் தமிழகமே
   தரணியில் இந்தியா தமிழகத்தின்
   தக்க சுபகிருது மிதுனதிங்கள்
2. திங்களிலே வியதிகதிமேல் மூவாறோர்திகதிவரை
   தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக
   இங்கனமே எதிர்கால பலன்குறித்த
   இயம்பிடுவேன் அகத்தியனும் வார ஆசிதன்னை
3. தன்னிலே ஞானபூமி தமிழகம்
   தக்க ஞானவழி ஏற்றால்
   இன்னாளின் நிதி நெருக்கடி
   இனமத வகுப்புவாத பிரச்சனை
4. பிரச்சனைகள் அனைத்தும் கடந்து
   பிரிவினை பிரச்சனை இல்லா
   பிறஅரசுகள் மெச்சும் வண்ணம்
   பின்னடைவில்லா பாதுகாப்பை காணும்
5. காணவே இறைநம்பிக்கை
   கலியில் கொண்ட மக்களை
   ஞானமிலா நிந்தனை செய்யா
   நம்பிக்கை இல்லையெனில் ஆளுமை
6. ஆளுமை தயவின் வழியாக
   அனைத்திலும் சமத்துவ நிலை
   பலமாகக் கொண்டு நடுநிலை
   பழுதில்லா ஆட்சிநிலை காண
7. காணவே மேலும் கீழுமான
   கண்டுரைப்பேன் ஆளுமைகளும்
   ஞானவழி நிர்வகிப்பாக மாறி
   நம்பிக்கைதரும் அரசாகவும் மாறி
8. மாறியே சமூகம் காத்திடும்
   மாசற்ற உயர்நிலை காணும்
   கூறிட தமிழகம் இந்தியா
   குறைவிலா பிறதேசம் மெச்ச

9. மெச்சவே ஒரே குடையின்கீழ்
மேலான மக்கள் இணைவும்
அச்சமிலா சகோதரத்துவம் பெருக
ஆளுமை சிறந்து வளர்ச்சி காணும்

10. காணுமே கடமை கண்ணியம்
கட்டுப்பாடு நிறைந்த மக்களை
ஞானவான்களை கொண்ட பூமியாக
ஞான ஆட்சியாக மாறுதல்காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆனி மாதம் 12ம் நாள் 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 19ம் நாள் 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

புராதனமும் வரலாற்று சிறப்பும் மிகுந்த பாரத தேசமே தன்னை நாடி வந்தோரை வாழவைக்கும் தமிழகதேசமே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆனி மாதம் 12ம் நாள் 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 19ம் நாள் 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஞானம் மிகுந்த ஞானபூமியாகிய தமிழகம் தகுந்த ஞான வழிகளை ஏற்று அதன் வழி நடந்திட்டால் தற்காலம் நாட்டினில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகளை கடந்து மேன்மையுறும். இனமத வகுப்புவாத பிரச்சனைகளையும் கடந்து எந்தவித பிரிவினைகளும் பிரச்சனைகளும் இல்லாமல் முன்னேறி பிற அரசாங்கங்கள் மெச்சி போற்றும்படி முன்னேறிடும் பாதுகாப்பான அரசாக மாறிடும்.

கடவுள் நம்பிக்கை குறைவாக காணப்படுகின்ற இந்த கலியுகத்திலும் கடவுள் நம்பிக்கை கொண்டு பாவ புண்ணியங்களுக்கு பயந்து வாழும் மக்களை நிந்தனை செய்யாமல் அவர்களது மனம் நோகும்படி செய்யாமல் இருக்கவேண்டும். கடவுள் நம்பிக்கை இல்லை எனினும் ஆள்வோர் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களை நிந்திக்காமல் அவர்களிடத்தும் தயவுடன் நடந்து நடுநிலையாய் செயல்படுவதுடன் மத்திய மாநில அரசுகளும் தர்மஞான நெறிகளை பின்பற்றி நடக்க தேசம் எங்கும் ஞானவழி நிர்வாகமாக மாறி மக்களுக்கு நம்பிக்கை மிகுந்த அரசாக மாறிடும். சமூகத்தை காக்கின்ற மாசற்ற அரசாக ஆகிடும். மிகுந்த உயர்வான நிலையை அரசு அடையும். உலகின் மற்றைய தேசங்கள் எல்லாம் போற்றிடும்படியான நல்லரசாக ஒருகுடையின் கீழ் ஒற்றுமையுள்ள அரசாக மாறி நாட்டுமக்கள் எல்லாம் பேதா பேதங்களை மறந்து ஒன்றுபட்ட சமூகமாக மாறிடும்.

நாட்டினில் சகோதரத்துவம் பெருக பெருக நாட்டின் அரசாட்சியும் மிகச் சிறந்து விளங்கும். நமது தேசம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிகுந்த நல்மக்களை மிகுதியாக கொண்டதாக ஞானம் மிக்க ஞானவான்களை கொண்ட ஞானபூமியாக மாறி ஞானிகள் துணையுடன் ஞான ஆட்சி நடக்கும் நல்தேசமாக தேசமெங்கும் ஞானஆட்சியாக மாற்றம் அடைந்து பெரும் சிறப்பை காணும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–